திருப்பூர் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தில்

தீபாவளி சிறப்புத் தள்ளுபடி விற்பனை தொடக்கம்

திருப்பூர் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தில் தீபாவளி சிறப்புத் தள்ளுபடி விற்பனையை குத்துவிளக்கேற்றி தொடங்கிவைத்த மாவட்ட ஆட்சியர் மனீஷ்.

திருப்பூர், செப்.16: திருப்பூர் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தில் தீபாவளி சிறப்புத் தள்ளுபடி விற்பனையை மாவட்ட ஆட்சியர் மனீஷ் புதன்கிழமை தொடங்கிவைத்தார்.

இதில் அவர் கூறியதாவது: தமிழக அரசின் கூட்டுறவு நிறுவனமான கோ-ஆப்டெக்ஸ், தீபாவளி சிறப்பு விற்பனைக்காக கைத்தறி ரகங்களுக்கு அனைத்து விற்பனை நிலையங்களிலும் 30 சதவீத அரசு சிறப்புத் தள்ளுபடி வழங்குகிறது. அரசுப் பணியாளர்களுக்கும், தனியார் நிறுவனப் பணியாளர்களுக்கும் கடன் விற்பனை நடைபெற்று வருகிறது.

தீபாவளி விற்பனைக்காக பிரிண்டட் சட்டைகள், குர்த்தீஸ்கள், பாலிரயான் எம்ப்ராய்டரி குர்த்தி, ஸ்ட்ரெய்ட் பேண்ட், சக்கரா பேண்ட் வித் கிராப் டாப், பலாசோ பேண்ட் விதி கிராப் டாப் செட், தோத்தி பேண்ட் வித் கிராப் டாப், காட்டன் எல்லப் பிரிண்டட் குர்த்தீஸ், காட்டன் ஸ்லப் கலம்கரி குர்த்தீஸ், சிறுமிகளுக்கான பட்டு பாவாடை சட்டை இரகங்கள், புதிய வண்ணங்கள் மற்றும் வடிவமைப்புகளில் உருவாக்கப்பட்ட காட்டன் சேலைகள், நைட்டிகள், ஆடவர்களுக்கான லினன், ரிங்கிள் ஃப்ரீ, எஸ்லிம்ஃபிட் ரெடிமேட் சட்டைகள் ஏராளமாக வரவழைக்கப்பட்டுள்ளன.

வாடிக்கையாளர்களின் வசதிக்காக ஞாயிறு உள்பட அனைத்து விடுமுறை நாள்களிலும் விற்பனை நிலையங்கள் செயல்படும். திருப்பூர் மாவட்டத்தில் திருப்பூர், உடுமலைபேட்டையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்கள் மூலமாக ரூ.1.20 கோடி விற்பனை இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்றார்.

மாணவர்கள் தாக்கியதில் அரசுப் பள்ளி தலைமை ஆசிரியர் படுகாயம்

திருப்பூர், செப்.16: திருப்பூர் நஞ்சப்பா மாநகராட்சி ஆண்கள் பள்ளியில் மாணவர்கள் தாக்கியதில் தலைமை ஆசிரியர் படுகாயமடைந்தார்.

பள்ளியில் இருந்து ஏற்கெனவே இடைநீக்கம் செய்யப்பட்டிருந்த மாணவர் ஒருவர் தேர்வு எழுதுவதற்காக புதன்கிழமை பள்ளிக்கு வந்ததாகவும், அப்போது அவருக்கும், தலைமை ஆசிரியருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது. இதில் ஆத்திரமடைந்த அந்த மாணவருடன் சேர்ந்து மொத்தம் 6 பேர் தலைமை ஆசிரியர் கர்ணனின் அறைக்குள் புகுந்து அவரைத் தாக்கியுள்ளனர். இதில் தலைமை ஆசிரியர் படுகாயமடைந்தார்.

இதுகுறித்து தகவல் அறிந்த வடக்கு காவல் நிலைய போலீஸார் பள்ளிக்கு சென்று தீவிர விசாரணை மேற்கொண்டனர். மேலும், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் மற்றும் மாணவர்களின் பெற்றோர்களும் பள்ளிக்கு வரவழைக்கப்பட்டு விசாரணை நடத்தப்பட்டது.

இச்சம்பவத்துக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ள அரசுப் பள்ளி ஆசிரியர்கள் கூட்டமைப்பு, பணிபுரியும் இடங்களில் ஆசிரியர்களுக்கு அச்சுறுத்தல் நிலவுவதாகவும், அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கு உரிய பணிப் பாதுகாப்பு வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளது.

மாநகரில் இன்று விநாயகர் விசர்ஜன ஊர்வலம்

பாதுகாப்பு பணியில் 1,400 போலீஸார்

திருப்பூர், செப்.16: திருப்பூரில் விநாயகர் விசர்ஜன ஊர்வலம் வியாழக்கிழமை (செப்.17) நடைபெறுவதையொட்டி பாதுகாப்பு பணியில் 1,400 போலீஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

விநாயகர் சதுர்த்தி விழாவையொட்டி திருப்பூர் மாநகர், மாவட்டம் முழுவதும் இந்து முன்னணி, விஸ்வ ஹிந்து பரிஷத் பாரத்சேனா உள்ளிட்ட பல்வேறு இந்து அமைப்புகள் மற்றும் பொதுமக்கள் சார்பில் 2,500 விநாயகர் சிலைகள் பிரதிஷ்டை செய்யப்பட்டன. இதில் திருப்பூர் மாநகர மற்றும் மாவட்ட இந்து முன்னணி சார்பில் மட்டும் 1,000 சிலைகள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. பிரதிஷ்டை செய்யப்பட்ட சிலைகளுக்கு தினமும் 3 வேளை பூஜைகள் செய்யப்பட்டு வந்தன.

இந்நிலையில், சிலைகளை நீர்நிலைகளில் கரைக்கும் விசர்ஜன ஊர்வலம் புதன்கிழமை முதல் தொடங்கியது. இந்து முன்னணி சார்பில் வியாழக்கிழமை விசர்ஜன ஊர்வலம் நடைபெறுகிறது.

திருப்பூர் புதிய பேருந்து நிலையம், தாராபுரம் சாலை மற்றும் செல்லம் நகர் ஆகிய 3 முக்கிய இடங்களில் இருந்து ஒரே நேரத்தில் ஊர்வலம் புறப்படுகிறது. அங்கிருந்து நகரின் முக்கிய சாலைகள் வழியாகச் சென்று ஆலாங்காட்டில் நிறைவடைகிறது. அங்கு நடைபெறும் பொதுக்கூட்டத்தில் இந்து முன்னணி மாநிலத் தலைவர் காடேஸ்வரா சி.சுப்பிரமணியம், பொதுச் செயலாளர் கிஷோர்குமார், மாநிலச் செயலாளர் செந்தில்குமார் உள்பட பலர் பேசுகின்றனர். காமாட்சிபுரி ஆதீனம் ஸ்ரீ பஞ்சலிங்கேஸ்வரர் சுவாமிகள் ஆசியுரை வழங்குகிறார். இந்து முன்னணி கேரள மாநிலத் தலைவர் கே.பி. சசிகலா, நடிகர் ரஞ்சித் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

ஊர்வலத்தின்போது அசம்பாவிதங்கள் ஏதும் ஏற்படாமல் இருக்க திருப்பூர் மாநகர காவல் ஆணையர் எஸ். ராஜேஸ்வரி நேரடி மேற்பார்வையில், சேலம் மாவட்ட போலீஸார், 200 பட்டாலியன் போலீஸார் மற்றும் ஊர்க்காவல் படையினர் என மொத்தம் 1,400 போலீஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். முக்கிய பாதைகள் மற்றும் சந்திப்புகளில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன.

போக்குவரத்து மாற்றம்; கனரக வாகனங்களுக்கு தடை

திருப்பூர் மாநகரில் விநாயகர் விசர்ஜன ஊர்வலம் வியாழக்கிழமை (செப்.17) நடைபெறுவதையொட்டி, சீரான வாகனப் போக்குவரத்தை உறுதி செய்யும் வகையில் காலை 8 மணி முதல் இரவு 10 மணி வரை போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இந்த குறிப்பிட்ட நேரத்தில் கனரக வாகனங்கள் திருப்பூர் மாநகருக்குள் நுழையவோ அல்லது மாநகரத்தில் இருந்து வெளியே செல்லவோ அனுமதி இல்லை.

ஊர்வலப் பாதையை பொறுத்தும், ஊர்வல நேரத்திலும் வாகனங்கள் மாற்று வழியில் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி, அவிநாசி தேசிய நெடுஞ்சாலையில் இருந்து திருப்பூர் நோக்கி வரும் இலகுரக வாகனங்கள் அனைத்தும் திருமுருகன்பூண்டியில் இருந்து பூலுவபட்டி, நெருப்பெரிச்சல், கூலிப்பாளையம் நான்கு சாலை வழியாக செல்லலாம். அவிநாசி சாலையில் இருந்து புதிய பேருந்து நிலையம் செல்லும் வாகனங்கள் கரூர் வைஸ்யா வங்கி அருகில் நிற்க வேண்டும்.

நல்லூர், முத்தணம்பாளையம் காங்கயம் சாலை சந்திப்பு வழியாக திருப்பூர் மாநகருக்குள் வரும் இலகுரக வாகனங்களும், தாராபுரம் சாலையில் இருந்து திருப்பூர் நோக்கி வரும் அனைத்து வாகனங்களும் கோவில்வழி, பெருந்தொழுவு, முத்தணம்பாளையம் வழியாக காங்கயம் சாலை செல்ல வேண்டும்.

காங்கயம் சாலையில் இருந்து தாராபுரம் நோக்கி செல்லும் வாகனங்கள் உஷா திரையரங்க சிக்னல் சந்திப்பில் திரும்பி பேருந்து நிலையம், சந்தைப்பேட்டை, வீரபாண்டி பிரிவு சென்று பழவஞ்சிபாளையம் வழியாக தாராபுரம் சாலையை அடையலாம். அங்கிருந்து நெருப்பெரிச்சல் கூலிப்பாளையம் நான்கு சாலை வழியாக காங்கயம், தாராபுரம் மற்றும் ஊத்துக்குளி செல்லலாம். இதற்கு பொதுமக்களும், வாகன ஓட்டிகளும் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

உடுமலை, மடத்துக்குளம், குடிமங்கலத்தில் விநாயகர் சிலைகள் விசர்ஜன ஊர்வலம்

உடுமலை, செப்.16: உடுமலை, மடத்துக்குளம், குடிமங்கலம் ஆகிய பகுதிகளில் விநாயகர் சிலை விசர்ஜன ஊர்வலம் புதன்கிழமை நடைபெற்றது.

இந்து முன்னணி சார்பில் உடுமலை, மடத்துக்குளம், குடிமங்கலம் உள்பட பல்வேறு பகுதிகளில் 125-க்கும் மேற்பட்ட சிலைகள் வைக்கப்பட்டிருந்தன.

இந்த சிலைகள் அனைத்தும் உடுமலை நகரில் உள்ள நேதாஜி மைதானத்துக்கு புதன்கிழமை மாலை வாகனங்களில் எடுத்துவரப்பட்டன. பின்னர் அங்கு ஊர்வலத் தொடக்க நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

அதைத்தொடர்ந்து கச்சேரி வீதி, தளி சாலை, மாரியம்மன் கோயில் வீதி, பழனி சாலை வழியாக ஊர்வலம் சென்று அமராவதி வாய்க்காலில் சிலைகள் கரைக்கப்பட்டன.

காவல் துணைக் கண்காணிப்பாளர் தையல் நாயகி தலைமையில் 100-க்கும் மேற்பட்ட போலீஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.

இதேபோல இந்து மக்கள் கட்சி, அனுமன் சேனா சார்பிலும் நூற்றுக்கும் மேற்பட்ட சிலைகள் வைக்கப்பட்டுள்ளனடிருந்தன.

அனைத்து சிலைகளும் உடுமலை நகரில் உள்ள குட்டைத் திடலுக்கு செவ்வாய்க்கிழமை, புதன்கிழமை ஆகிய இரண்டு நாள்களில் வாகனங்களில் எடுத்துவரப்பட்டு கரைக்கப்பட்டன.

சாக்கடை கால்வாயை சீரமைக்கக் கோரி சாலை மறியல்

திருப்பூர் செப்.16 : சாக்கடை கால்வாயை சீரமைக்கக் கோரி பொதுமக்கள் திடீர் சாலை மறியலில் ஈடுபட்டனர்.

திருப்பூர் பிரிட்ஜ்வே பகுதியில் ஓம் சக்தி கோயில் அருகே கடந்த 2 நாள்களாக சாக்கடை கால்வாய் உடைந்து, கழிவு நீர் சாலையில் தேங்கி துர்நாற்றம் வீசி வந்தது. இதனால் அப்பகுதி மக்கள் பெரும் சிரமத்துக்கு உள்ளாகினர்.

சாக்கடை கால்வாயை உடனடியாக சீரமைக்க பொதுமக்களும், இந்து முன்னணி நிர்வாகிகளும் மாநகராட்சி அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்து வந்தனர். இருப்பினும், மாநகராட்சி அதிகாரிகள் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று கூறப்படுகிறது.

இதையடுத்து, மாநகராட்சியின் மெத்தனப் போக்கை கண்டித்து பொதுமக்களும், இந்து முன்னணி நிர்வாகிகளும் ஒன்றிணைந்து அப்பகுதியில் புதன்கிழமை சாலை மறியலில் ஈடுபட்டனர். இதனால் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

தகவலறிந்து திருப்பூர் வடக்கு காவல் நிலைய போலீஸார் சென்று பேச்சுவார்த்தை நடத்தினர். மாநகராட்சி அதிகாரிகளுடன் பேசி உடனடியாக சாக்கடை கழிவுநீரை அகற்றுவதோடு கால்வாய் அடைப்பை நீக்க நடவடிக்கை எடுப்பதாக உறுதியளிக்கப்பட்டது. இதையடுத்து அனைவரும் கலைந்து சென்றனர்.

கைத்தறி நெசவாளர்கள் காத்திருப்புப் போராட்டம்

பல்லடம், செப்.16: வீட்டுமனைகளாக பிரித்து வழங்கப்பட்ட பூமிதான நிலத்தில் வீடு கட்ட, மின் வசதி பெற அலைந்தும் முடியவில்லை எனக் கூறி கைத்தறி நெசவாளர்கள் காத்திருப்புப் போராட்டத்தில் புதன்கிழமை ஈடுபட்டனர்.

பல்லடம் அருகே வடுகபாளையம்புதூர் கிராமத்தில் உள்ள 13 ஏக்கர் பூமிதான நிலம் பிரிக்கப்பட்டு, கடந்த 1992-ஆம் ஆண்டு 292 கைத்தறி நெசவாளர் குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டன. ஆனால், அந்த இடத்தில் வீடு கட்டவோ, மின்சார வசதி பெறவோ முடியவில்லை என நெசவாளர்கள் தொடர்ந்து குற்றஞ்சாட்டி வருகின்றனர். இப்பிரச்னைக்கு தீர்வு காண, பல்லடம் தாலுகா அலுவலகம் முன்பு கைத்தறி நெசவாளர்கள் புதன்கிழமை காத்திருப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதுகுறித்து திருப்பூர் மாவட்ட கைத்தறி நெசவாளர் சங்கச் செயலாளர் (சி.ஐ.டி.யூ.) கனகராஜ் கூறியதாவது:

தொடர்ந்து பல்வேறு முயற்சிகள் மேற்கொண்டு, சென்னை சென்று நிலச் சீர்திருத்த ஆணையரை சந்தித்தோம். நில உரிமை ஆவணம் அனைவருக்கும் வழங்கப்படும் என்றும், அதனடிப்படையில் வீட்டுக் கடன், மின் வசதி உள்ளிட்டவற்றை பெற்றுக் கொள்ளலாம் என்றும் அவர் கூறினார்.

இதையடுத்து பல முறை கோரிக்கை மனுவுடன் பல்லடம் வட்டாட்சியரை சந்தித்து வருகிறோம். இங்கு 10 நாள்களுக்கு ஒரு முறை வட்டாட்சியர் மாறிவிடுகிறார். இவ்வாறு கடந்த 1992-ஆம் ஆண்டு முதல் இதுவரை இப்பிரச்னைக்காக 1,000 மனுக்கள் அளித்துள்ளோம். தற்போது மனு அளித்து போராட்டத்திலும் ஈடுபட்டுள்ளோம். 1992-ஆம் ஆண்டு முதல் நிலத்துக்காக அலைந்தவர்களின் ஆயுள் காலமே முடியக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது என்றார்.

பல்லடம் வட்டாட்சியர் சரவணன் கூறும்போது, 'கைத்தறி நெசவாளர்களிடம் நடத்திய பேச்சுவார்த்தையில் 22-ஆம் தேதி முதல் தலா 25 பேரிடம் விசாரணை நடத்தப்பட்டு, உரிய நடவடிக்கை எடுக்கப்படும்' என்றார். இதை ஏற்று கைத்தறி நெசவாளர்கள் கலைந்து சென்றனர்.

மின்வாரிய தொழிற்சங்கத்தினர் ஆர்ப்பாட்டம்

பல்லடம், செப்.16: தமிழ்நாடு மின் வாரிய தொழிற்சங்கத்தின் திருப்பூர் மாவட்ட கிளை சார்பில் பல்லடத்தில் புதன்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

பல்லடம் மின் பகிர்மான வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு மாவட்டச் செயலாளர் கந்தசாமி தலைமை வகித்தார்.

மின் வாரியத்தில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்ப வேண்டும், ஒப்பந்தத் தொழிலாளர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும், பழைய ஓய்வூதியத் திட்டத்தை அமல்படுத்த வேண்டும், ஸ்மார்ட் மீட்டர் திட்டத்தை கைவிட வேண்டும்

திருமணக் கடன் ரூ.5 லட்சமாக உயர்த்தி வழங்க வேண்டும் உள்பட பல்வேறு கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

சங்க நிர்வாகிகள் தனபால், அஜய் மூர்த்தி, கோவிந்தசாமி, தமிழரசு, பால்ராஜ், ராஜேஸ்வரி உள்பட பலர் கலந்துகொண்டனர். மாவட்ட இணைச் செயலாளர் பாலகிருஷ்ணன் நன்றி கூறினார்.

ஒத்திவைக்கப்பட்ட முதல்வர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகள் நாளை தொடக்கம்

திருப்பூர், செப்.16: திருப்பூர் மாவட்டத்தில் ஒத்திவைக்கப்பட்ட முதல்வர் கோப்பைக்கான மாவட்ட மற்றும் மண்டல அளவிலான விளையாட்டுப்போட்டிகள் வெள்ளிக்கிழமை (செப்.18) முதல் நடைபெற உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

திருப்பூர் மாவட்டத்தில் தேர்தல் நடத்தை விதிகள் காரணமாக ஒத்திவைக்கப்பட்ட முதல்வர் கோப்பைக்கான மாவட்ட மற்றும் மண்டல அளவிலான அனைத்து விளையாட்டுப் போட்டிகளும் வெள்ளிக்கிழமை முதல் நடைபெறுகிறது.

விளையாட்டுப் போட்டிகள், தேதி மற்றும் நடைபெறும் இடங்கள் குறித்த அனைத்து தகவல்களையும் *sdat.tn.gov.in* மற்றும் https://tncmtrophy.sdat.in/event}schedule எனும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையஇணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. இதைப் போட்டியாளர்கள் பார்வையிட்டு தெரிந்து கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பஞ்சாப் & சிந்த் வங்கி
(A Govt. of India Undertaking)
கிளை: இண்டர்நேஷனல் பேங்கிங் டிவிஷன் எண்.225, தாராபுரம் சாலை, திருப்பூர் - 641 604 Phone: 0421-2243409,2248367, E-mail: t0691@psb.bank.in

மின் ஏல விற்பனை ரத்து செய்வதற்கான அறிவிப்பு

10.09.2026 அன்று தினமணி நாளிதழ், கோயம்புத்தூர் பதிப்பில் பிரசுரிக்கப்பட்ட எங்களது 07.09.2026 தேதியிட்ட விற்பனை அறிவிப்பில் 1. திரு.மதன்.R.R. த/பெ.ரவிசந்திரன்.R, 2.திரு. ரவிசந்திரன்.R, 3. அல்லி ரவிசந்திரன் க/பெ.ரவிசந்திரன்.R ஆகியோர்களின் கடன் கணக்குகளில் 25.09.2026 அன்று நடைபெறுவதாக இருந்த மின் ஏல விற்பனை அறிவிப்பு நிர்வாக காரணங்களுக்காக ரத்து செய்யப்படுகிறது. இந்த அறிவிப்பு அனைத்து கொள்முதல்தாரர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது. அனைத்து பிற விவரங்களில் எந்தவித மாற்றமும் இல்லை.

தேதி : 16.09.2026
இடம் : கோயம்புத்தூர்
அதிகாரப்பூர்வ அதிகாரி,
பஞ்சாப் & சிந்த் பேங்க்

NAME CORRECTION

I, Mr. BHARATHBABU, S/o.Duraisamy, aged about 52 yrs, residing at D.No.69/B1, JS Swamalaksmi Apartment, JS Garden, Nallur, Tirupur South Taluk, Tirupur Dist-641606. Do hereby solemnly affirm and sincerely state as follows.

That my name is mistakenly mentioned as BHARAT BABU in my passport no "R1002062"

That My correct full name is BHARATHBABU and the said name is already reflected in My Aadhaar Card (no. 3006 3203 2663) and Pan Card (No. ACIPB6319D). I State that BHARAT BABU and BHARATHBABU refer to one and the same person namely myself.

I hereby declare that I have changed/corrected my name from BHARAT BABU to BHARATHBABU for all purposes and records including my passport also.

Tirupur, 15-09-2026
BHARATHBABU

பெயர் மாற்றம்

யுவராஜ் நடராஜன், த/பெ. நடராஜன் (பிறந்த தேதி - 2/7/1974 (பிறப்பிடம் - கோயமுத்தூர்) கதவு எண்.50A, வெங்கடேஸ்வரா நகர், முதல் வீதி, கவுண்டம்பாளையம், கோயம்புத்தூர் - 641030 என்ற விலாசத்தில் வசித்து வரும் நான் இனி மேற்கொண்டு யுவராஜ் கவுண்டம்பாளையம் நடராஜன் என அழைக்கப்படுவேனாகவும்.

-யுவராஜ் கவுண்டம்பாளையம் நடராஜன்

பெயர் மாற்றம்

நான், JAYANTH VISHWANATHAN த/பெ.விஸ்வநாதன், வயது 19, கதவு எண். 180/1, கொல்லுக் காட்டுமேடு, புஞ்சை லக்காபுரம், ஈரோடு மாவட்டம் - 638000. வசிக்கின்ற நான் எனது பெயரை JAYANTH VISWANATHAN என்று பெயர் மாற்றம் செய்து கொண்டேன்.

JAYANTH VISHWANATHAN

கண்டெய்னர் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா லிட்.
(இந்திய அரசின் கீழான ஒரு நவரத்தினா நிறுவனம்)
வட்டார / தொகுதி அலுவலகம், சென்னை, 8-வது தளம், CAO/CN அலுவலகம்,
தெற்கு ரயில்வே கட்டடம், ஈ வெ ரா . பெரியார் சாலை, எழும்பூர், சென்னை - 600008.

விருப்பம் தெரிவித்தல் (EOI)

கண்டெய்னர் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா லிமிடெட் (CONCOR) விருப்பம் தெரிவிப்பதற்கான (EOI) அழைப்பை விடுக்கிறது; விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:-

EOI எண்.	CON/Area-III/Leasing out Warehouse Space/IGU/EOI/2026-27;
பணியின் பெயர்	பின்வரும் முகவரியில் அமைந்துள்ள உள்நாட்டு கொள்கலன் டிப்போவில் உள்ள ஒரு (01) EXIM கிடங்கை குத்தகைக்கு விடுதல். இருகூர், L&T புறவழிச் சாலை, IOCL முனையம் எதிரே, கோயம்புத்தூர், தமிழ்நாடு-641103
குத்தகை காலம்	5 (ஐந்து) ஆண்டுகள் (கூடுதலாக 2 ஆண்டுகள் நீட்டிக்கும் வசதியுடன்);
EOI வெளியிடப்படும் தேதி	17.09.2026
வலைதளங்களில் EOI ஆவணம் கிடைக்கும்	17.09.2026 நாளன்று 15:00 மணி முதல்
EOI சமர்ப்பிக்க கடைசி தேதி & நேரம்	08.10.2026 அன்று அல்லது அதற்கு முன் (15:00 மணி வரை)

ஆர்வமுள்ளவர்கள் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை (விண்ணப்பத்தைச் சமர்ப்பிப்பதற்கு முன் விவரங்களுக்கு). www.concorindia.com அல்லது eprocure.gov.in ஆகிய இணையதளங்களில் பார்வையிடலாம் மேலும், அவ்வப்போது இணையதளங்களைப் பார்வையிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. எந்தவொரு காரணத்தையும் குறிப்பிடாமல் எந்தவொரு விண்ணப்பத்தையும் அல்லது அனைத்து விண்ணப்பங்களையும் நிராகரிக்கும் உரிமையை CONCOR கொண்டுள்ளது. மேலும், இந்த EOI தொடர்பான திருத்தங்கள் அல்லது கூடுதல் விவரங்கள் ஏதேனும் இருந்தால், அவை மேற்சொன்ன இணையதளங்களில் மட்டுமே வெளியிடப்படும். இதற்காக செய்தித்தாள் விளம்பரம் எதுவும் வெளியிடப்படாது.

SUNDARAM HOME
— Sundaram Finance Group —
பதிவு அலுவலகம் : எண் 21, பட்டுல்லாஸ் சாலை, சென்னை - 600 002.
நிறுவன அலுவலகம் : சுந்தரம் டவர்ஸ், எண் 46, ஒயிட்ஸ் சாலை, சென்னை - 600 014.
கிளை அலுவலகம் : எண். 1089, 1வது தளம், லட்சுமி பிளாசா, அவிநாசி சாலை, P.N. பாளையம், கோயம்புத்தூர் - 641 037.

சுவாதீன அறிவிப்பு

பிரிவு 13(4)-ன்கீழ் வழங்கப்பட்ட பிற்சேர்க்கை IV அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8(1) ஆகியவற்றின்படி சுந்தரம் ஹோம் ஃபைனான்ஸ் லிட்., நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலர் கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002, பிரிவு 13(2)-இன் கீழும் அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 3-இன் கீழுள்ள உரிமைகளைப் பயன்படுத்தியும் கோரிக்கை அறிவிப்பினைக் கடன்தாரர் மற்றும் கூட்டுக் கடன்தாரர் ஆகியோருக்கு அனுப்பி அதில் குறிப்பிட்டுள்ள தொகையை பெறப்படும் நாள் வரையிலான மேல்வட்டி, செலவினங்கள் மற்றும் இதர கட்டணங்கள் முதலானவை ஏதும் செலுத்தப்பட வேண்டியிருப்பின் அவை உட்பட அனைத்தையும் சேர்த்து அவ்வறிவிப்பு கிடைத்த நாளிலிருந்து 60 நாட்களுக்குள் செலுத்துமாறு கோரியிருந்தார். கடன்தாரர்(கள்) அத்தொகையை முழுவதுமாகச் செலுத்தத் தவறியபடியால் கடன்தாரர்களுக்கும் பொதுமக்களுக்கும் இதன் மூலம் தெரிவிப்பது யாதெனில், அதிகாரப்பூர்வ அலுவலர் மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(4) மற்றும் அதனுடன் SARFAESI சட்டம் விதி 8-இன் கீழ் தமக்குள்ள உரிமைகளைப் பயன்படுத்திக் கீழே குறிப்பிட்டுள்ள சொத்தை சுவாதீனத்தில் எடுத்துக் கொண்டுள்ளார். மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13, உட்பிரிவு (8)-இன்படி கடனீட்டுச் சொத்துக்களை மீட்கக் கடன்தாரருக்கு இதன் மூலம் அழைப்பு விடுக்கப்படுகிறது. எனவே கடன்தாரர்களுக்குக் குறிப்பாகவும் பொதுமக்களுக்குப் பரவலாகவும் இதன் மூலம் எச்சரிக்கையிடுவது யாதெனில், கடனீட்டுச் சொத்தின் மீது எந்தவொரு பேரமோ ஒப்பந்தமோ வைத்துக் கொள்ள வேண்டாம். மீறினால் அது சுந்தரம் ஹோம் ஃபைனான்ஸ் லிட்.,-க்குக் கட்டணம் உட்பட சேர்த்து செலுத்துவதற்குக் கட்டுப்பட்டதாகும்.

வ. எண்	கோப்பு எண்கள்	கடன்தாரர்கள் / கூட்டுக் கடன்தாரர்கள் பெயரும் முகவரியும்	வெளியீட்டு நாள்	அறிவிப்புத் தொகை	சுவாதீன நாள்	மொத்த நிலுவைத் தொகை
1	CMB20240093	பாலசுப்ரமணியம் T (கடன்தாரர்) கதவு எண். 10, புதுகாடு 2வது தெரு, வேலன் ஹோட்டல் அருகில் (வலது பக்கம்), காங்கயம் சாலை, திருப்பூர் - 641604.	04.07.2026	ரூ.4,13,047/-	15.09.2026	ரூ.4,26,345/-
2	CMB20240099	மோகனாம்பாள் B (கூட்டுக்கடன்தாரர்)	04.07.2026	ரூ.30,35,238/-	15.09.2026	ரூ.31,10,419/-

சொத்து அட்டவணை : திருப்பூர் பதிவு மாவட்டம், நல்லூர் சார்-பதிவு மாவட்டம், திருப்பூர் தெற்கு வட்டம், நல்லூர் கிராமம், புல எண் (S.F. No.) 403-ல் உள்ள 3.77 ஏக்கர் புஞ்சை நிலம் (தீர்வையினம் ரூ. 3.06) வீட்டு மனைகளாகப் பிரிக்கப்பட்டு 'அமர்ஜோதி ரத்தினகிரீஸ்வரர் நகர்' எனப் பெயரிடப்பட்டுள்ளது. இதில் மனை எண் 378-ன் எல்லைகள் பின்வருமாறு :- வடக்கே மனை எண் 377-ன் ஒரு பகுதி, தெற்கே 30 அடி அகலமுள்ள கிழக்கு - மேற்கு லே-அவுட் சாலை, கிழக்கே புல எண் 402, மேற்கே மனை எண் 379. இதன் அளவுகள் :- வடக்கு பக்கம் கிழக்கு - மேற்காக 35 அடி; கிழக்கு முனையிலிருந்து வடக்கு - தெற்காக 67 அடி; தெற்கு முனையிலிருந்து மேற்கு நோக்கி 57 1/2 அடி; மேற்கு முனையிலிருந்து வடக்கு நோக்கி 60 அடி. மொத்தம் 2775 சதுர அடி (257.80 சதுர மீட்டர்) பரப்பளவு கொண்ட இந்நிலம், அனைத்து பயன்பாட்டு உரிமைகளுடனும் (EASEMENTARY RIGHTS) கூடியது. இம்மனை தற்போது உட்பிரிவு செய்யப்பட்ட புல எண் 403/1A1 மற்றும் பட்டா எண் 2409-ன் கீழ் வருகிறது. நல்லூர் பேரூராட்சி செயல் அலுவலரின் 22.4.2004 தேதியிட்ட ந.க. எண் 140/2001-ன் படி இது முறைப்படுத்தப்பட்டுள்ளது. சொத்துக்கான அனைத்து இணைப்புகளும் மற்றும் அணுகுவதற்கான பயன்பாட்டு உரிமைகளும் இதனுடன் அடங்கும்; இது தொடர்பான முழுமையான விவரங்கள் உரிமை ஆவணம் எண் 2907/2023-ல் விவரிக்கப்பட்டுள்ளன.

நாள் : 15.09.2026
சுந்தரம் ஹோம் ஃபைனான்ஸ் லிட். சார்பில்
அதிகாரப்பூர்வ அலுவலர்

WIZZMONI FINANCIAL SERVICES LIMITED
(formerly Unimoni Financial Services Limited)
RO: N.G. 12 & 13 Ground Floor, North Block, Manipal Centre,
Dickenson Road, Bangalore - 560 042. CIN No. U85110KA1995PLC018175

பொது அறிவிப்பு

இதன் மூலம் பொதுமக்களுக்கு தெரிவிப்பது என்னவென்றால் அடகு வைக்கப்பட்ட தங்க ஆபரணங்களின் ஏலமானது விஸ்மோனி பைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட் (முன்னர் யூனிமோனி பைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட்) நிறுவனத்தால் 23.09.2026 அன்று காலை 10:00 மணிக்கு கீழே கொடுக்கப்பட்டுள்ள அந்தந்த மையங்களில் நடத்தப்படும். ஏலம் விடப்படும் தங்க ஆபரணங்கள், தங்கள் நிலுவைத் தொகையை செலுத்தத் தவறிய எங்கள் பல்வேறு வாடிக்கையாளர்களின் கடன் கணக்குகளைச் சேர்ந்தவை. இந்தக் கடன்தாரர்களுக்கு எங்கள் ஏல அறிவிப்புகள் முறையாக வழங்கப்பட்டுள்ளன. ஏலம் விடப்படும் தங்க ஆபரணங்கள் கிளை பெயருடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ள எங்கள் பல்வேறு வாடிக்கையாளர்களின் தவணை கடந்த கடன் கணக்குகளைச் சேர்ந்தவை.

Auction Centre Address & Loan Nos: COIMBATORE - SATHY ROAD PROZONE MALL (CSP - DOOR NO 314, VSRS COMPLEX, IST FLOOR, SHOP NO C5,SATHY ROAD, SIVANADHAPURAM,Contact:8089937222) 2353680, 2354991, 2352985, 2351945, 2351971, 2352227, 2268382, 2333964, 2352212, 2315206, 2346415, 2340017, 2345122, 2350660, 2355479, 2364759, 2287443, 2309219, 2376560, 2376461. COIMBATORE (COI - SUBBU PLAZA, STATE BANK ROAD, GROUND FLOOR, SHOP No. 1,2&3 ,COIMBATORE, Contact: 8754044566) 2314688, 2352038. ERODE (ERD - M/S. SARAVANA COMPLEX,81/76, DEEPA MEDICALS UPSTAIRS TEACHERS COLONY BUS STOP, Contact: 8012581007) 2343463, 2346931, 2351879, 2359652. POLLACHI (POL - NO 4 SS COMPLEX, BUILDING NO 4,NEW SCHEME ROAD, POLLACHI, Contact: 8012581009) 2342107, 2336391, 2261697, 2362392, 2362430, 2262533, 2353194, 2259209, 2263591, 2267893, 2298016, 2283832, 2364646, 2252803. TIRUPUR (TPR - FIRST FLOOR, 696MANIPAL AISHWARYAM, KAMARAJ ROBANK OF BARODA UPSTAIRS, TIRUP, Contact: 8012581008) 2301374, 2336731, 2337402, 2336367, 2344931, 2346608, 2367283.

(Reserves the right to alter the number of accounts to be auctioned &/ postpone / cancel the auction without any prior notice)

பஞ்சாப் நேஷனல் வங்கி
...the name you can BANK upon!
SAMB சென்னை, 4வது தளம், PNB டவர்ஸ், எண்.46-49, ராயப்பேட்டை நெடுஞ்சாலை, சென்னை 14. தொலைபேசி: 044-28112261-90 மின்னஞ்சல்: ZS8341@pnb.bank.in

2002 ஆம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்க) விதிகள் 8(6) மற்றும் 9(1)ன் கீழ் அசையாச் சொத்துக்களுக்கான மின் ஏல விற்பனை குறித்து பொதுமக்களுக்கான அறிவிப்பு

இந்த அறிவிப்பின் மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும் மற்றும் கடன்தாரர்(கள்) மற்றும் அடமானதாரர்(கள்)க்கு குறிப்பாகவும் கடன் வழங்கிய பஞ்சாப் நேஷனல் வங்கி யின் அதிகாரபூர்வ அதிகாரியானவர், கீழே குறிப்பிட்ட பெயர்களின் உள்ள கடன்தாரர்(கள்) மற்றும் அடமானதாரர்(கள்) ஆகியோரிடமிருந்து வங்கிக்கு வந்து சேரவேண்டிய கீழ் குறிப்பிட்டுள்ள கடன் நிலுவைத் தொகையை வசூலிக்கும் பொருட்டு ஆக்கப்பூர்வ சுவாதீனத்தில் எடுத்துக்கொண்டு, அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழே குறிப்பிட்டுள்ள அசையாச் சொத்து(க்களை), "உள்ள இடத்தில் உள்ளவாறு", "உள்ளது உள்ளவாறு" மற்றும் "எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே" எனும் அடிப்படையில் 06-10-2026 அன்று விற்கப்பட உள்ளன.

கடன்தாரர் / அடமானதாரர்/மேம்படுத்துநர்:
1) M/s. RBR Garments Private Limited, எண்.177/3-A1, பச்சாங்காட்டுப்பாளையம், காரைபுதூர் கிராமம், அருள்புரம் அஞ்சல், திருப்பூர் – 641 605.
2) திரு. B. சண்முகசுந்தரம், 1/556, TPN கார்டன், K. செட்டிப்பாளையம், தாராபுரம் சாலை, திருப்பூர் – 641 604
3) திருமதி. S. வைஷ்ணவி மீனா, 1/556, TPN கார்டன், K. செட்டிப்பாளையம், தாராபுரம் சாலை, திருப்பூர் – 641 604

அடமானத்தில் உள்ள சொத்தின் விவரங்கள்

பிணையச் சொத்தின் விவரங்கள்: M/s. RBR Garments Pvt Ltd இன் பெயரில் உள்ள சொத்து: திருப்பூர் பதிவு மாவட்டம், பல்லடம் சார்பதிவு மாவட்டம், திருப்பூர் மாவட்டம், பல்லடம் வட்டம், காரைபுதூர் கிராம ஊராட்சி வாரியத்தின் எல்லைகளுக்குட்பட்ட, அருள்புரம் அஞ்சல், காரைப்புதூர் கிராமம், பச்சாங்காட்டுப்பாளையம் சர்வே எண்.177/3A1, 178/3, 179/3B1C, 179/3B1B இல் அடங்கிய M. P. மில் தோட்டம், கதவு எண்.7/67A, 7/67A1, 7/67B, 7/67C ஆகியவைகளில் அமைந்துள்ள நிலம் & கட்டிடம் வகை எண்.I: G. சர்வே எண்.177/3A1 இன் நிலங்கள் பரப்பளவு 4.96ஏக்கர்கள் @ ரூ. 4.01 அதில் பரப்பளவு 3.56ஏக்கர்கள் நிலம், பின்வருமாறு எல்லைகள்: G. சர்வே எண்.177/3A2 நிலங்களுக்கு வடக்கில், M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.177/3A1 இன் பரப்பளவு 1.40 ஏக்கர்கள் நிலங்கள், G. சர்வே எண்.179/3B1C இன் பரப்பளவு 1.26 ½ ஏக்கர்கள் நிலங்கள் மற்றும் G. சர்வே எண்.179/3B1B இன் பரப்பளவு 0.47 ½ ஏக்கர்கள் நிலங்களுக்கு கிழக்கில், M/s. RBR Garments Pvt Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.177/3A1 இன் பரப்பளவு 1.40 ஏக்கர்கள் நிலங்களுக்கு தெற்கில், G. சர்வே எண்.177/3B இன் நிலங்களுக்கு மேற்கில். ஆகியவற்றிற்கு இடையில் பரப்பளவு 3.56ஏக்கர்கள் நிலம். வகை எண்.II : மேலும் அதே கிராமத்தின் G. சர்வே எண்.177/3A1 இன் பரப்பளவு 1.40 ஏக்கர்கள் நிலம், பின்வருமாறு எல்லைகள்: M/s. RBR Garments Pvt Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.177/3A1 இன் பரப்பளவு 3.56 ஏக்கர்கள் நிலங்களுக்கு வடக்கில், M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.179/3B1B இன் பரப்பளவு 1.44 ஏக்கர்கள் நிலங்கள் மற்றும் G. சர்வே எண்.179/3B1B இன் பரப்பளவு 0.47 ½ ஏக்கர்கள் நிலங்களுக்கு கிழக்கில், G. சர்வே எண்.177/2A இன் கிழக்கு மேற்காக வாகனப் பாதை மற்றும் M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.178/3 இன் பரப்பளவு 0.04 ஏக்கர்கள் நிலங்களுக்கு தெற்கில், M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.177/3A1 இன் பரப்பளவு 3.56 ஏக்கர்கள் நிலங்களுக்கு மேற்கில். ஆகியவற்றிற்கு இடையில் பரப்பளவு 1.40ஏக்கர்கள் நிலம். வகை எண்.III : மேலும் அதே கிராமத்தின் G. சர்வே எண்.178/3, இன் பரப்பளவு 0.04ஏக்கர்கள் முக்கோண வடிவங்கொண்ட நிலம், பின்வருமாறு எல்லைகள்: M/s. RBR Garments Pvt Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.177/3A1 இன் பரப்பளவு 1.40 ஏக்கர்கள் நிலங்களுக்கு வடக்கில், M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.177/3B1B இன் பரப்பளவு 1.44ஏக்கர்கள் நிலங்கள், G. சர்வே எண்.179/3B1B இன் பரப்பளவு 1.44 ஏக்கர்கள் நிலங்கள் மற்றும் G. சர்வே எண்.179/3A & 179/2 இல் உள்ள கிழக்கு மேற்காக கால்வாய்க்கு கிழக்கில், G. சர்வே எண்.178 பகுதி இன் நிலங்களுக்கு தெற்கில். ஆகியவற்றிற்கு இடையில் பரப்பளவு 0.04 ஏக்கர்கள் நிலம். வகை எண். IV : மேலும் அதே கிராமத்தின் G. சர்வே எண்.179/3B1C இன் பரப்பளவு 1.26 ½ ஏக்கர்கள் நிலம், பின்வருமாறு எல்லைகள்: G. சர்வே எண்.179/3B2 இன் கிழக்கு மேற்காக கால்வாய்க்கு வடக்கில், M/s. RBR Garments Pvt Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.179/3B1C இன் பரப்பளவு 0.17 ½ ஏக்கர்கள் நிலங்களுக்கு கிழக்கில், M/s. RBR Garments Pvt Ltd-ற்கு சொந்தமான G.சர்வே எண்.179/3B1B இன் பரப்பளவு 0.47 ½ ஏக்கர்கள் நிலங்களுக்கு தெற்கில், M/s. RBR Garments Pvt Ltd-ற்கு சொந்தமான G.சர்வே எண்.177/3A1 இன் பரப்பளவு 3.56 ஏக்கர்கள் நிலங்களுக்கு மேற்கில், ஆகியவற்றிற்கு இடையில் பரப்பளவு 1.26 ½ ஏக்கர்கள் நிலம். வகை எண்.V : மேலும் அதே கிராமத்தின் G. சர்வே எண்.179/3B1C இன் பரப்பளவு 0.17 ½ ஏக்கர்கள் நிலம், பின்வருமாறு எல்லைகள்: G. சர்வே எண்.179/3B2 இன் கிழக்கு மேற்காக கால்வாய்க்கு வடக்கில், M/s. Green Textile Process-ற்கு சொந்தமான G. சர்வே எண்.179/3B1C இன் பரப்பளவு 2.06 ஏக்கர்கள் நிலங்களுக்கு கிழக்கில், M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.179/3B1B இன் பரப்பளவு 0.07 ½ ஏக்கர்கள் நிலங்களுக்கு தெற்கில், M/s. RBR Garments Pvt Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.177/3B1C இன் பரப்பளவு 1.26½ ஏக்கர்கள் நிலங்களுக்கு மேற்கில், ஆகியவைகளுக்கு இடையில் பரப்பளவு 0.17 ½ ஏக்கர்கள் நிலம். வகை எண்.VI : மேலும் அதே கிராமத்தின் G. சர்வே எண்.179/3B1B இன் பரப்பளவு 0.47 ½ ஏக்கர்கள் நிலம், பின்வருமாறு எல்லைகள்: M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.179/3B1C இன் பரப்பளவு 1.26 ½ ஏக்கர்கள் நிலங்களுக்கு வடக்கில், M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.179/3B1B இன் பரப்பளவு 0.07 ½ ஏக்கர்கள் நிலங்களுக்கு கிழக்கில், M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.179/3B1B இன் பரப்பளவு 1.44 ஏக்கர்கள் நிலங்களுக்கு தெற்கில், M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.177/3A1 இன் பரப்பளவு 3.56ஏக்கர்கள் நிலங்களுக்கு மற்றும் M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.177/3A1 இன் பரப்பளவு 1.40ஏக்கர்கள் நிலங்களுக்கு மேற்கில். ஆகியவைகளுக்கு இடையில் பரப்பளவு 0.47 ½ ஏக்கர்கள் நிலம். வகை எண்.VII : மேலும் அதே கிராமத்தின் G. சர்வே எண்.179/3B1B இன் பரப்பளவு 0.07 ½ ஏக்கர்கள் நிலம், பின்வருமாறு எல்லைகள்:M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.179/3B1C இன் பரப்பளவு 0.17 ½ ஏக்கர்கள் நிலங்களுக்கு வடக்கில், M/s. Green Textile Process-ற்கு சொந்தமான G. சர்வே எண்.179/3B1B இன் பரப்பளவு 1.15 ஏக்கர்கள் நிலங்களுக்கு கிழக்கில், M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.179/3B1B பகுதியின் நிலத்திற்கு தெற்கில், M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.179/3B1B இன் பரப்பளவு 0.47 ½ ஏக்கர்கள் நிலங்களுக்கு மேற்கில். ஆகியவைகளுக்கு இடையில் பரப்பளவு 0.07 ½ ஏக்கர்கள் நிலம். வகை எண்.VIII : மேலும் அதே கிராமத்தின் G. சர்வே எண். 179/3B1B இன் பரப்பளவு 1.44 ஏக்கர்கள் நிலம், பின்வருமாறு எல்லைகள்: M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.179/3B1B இன் பரப்பளவு 0.47 ½ ஏக்கர்கள் நிலங்களுக்கு வடக்கில், M/s. Green Textile Process-ற்கு சொந்தமான G. சர்வே எண்.179/3B1B இன் பரப்பளவு 4.29 ஏக்கர்கள் நிலங்களுக்கு கிழக்கில், G. சர்வே எண். 179/3A & 179/2 இன் கிழக்கு மேற்காக கால்வாய்க்கு தெற்கில், M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.177/3A1 இன் பரப்பளவு 1.40 ஏக்கர்கள் நிலங்கள் மற்றும் M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.178/3 இன் பரப்பளவு 0.04 ஏக்கர்கள் நிலங்களுக்கு மேற்கில், ஆகியவைகளுக்கு இடையில் பரப்பளவு 1.44 ஏக்கர்கள் நிலம். ஆவண எண்.744/2002, 758/2002, 1763/2002, 5474/2003 & 2197/2004 இல் குறிப்பிட்டபடி வகை எண்.I முதல் வகை எண்.VIII வரை உள்ள மொத்தப் பரப்பளவு 8.43 ஏக்கர்கள் நிலம் மற்றும் அதில் கட்டப்பட்டுள்ள ஆட்சர் வடிவமைப்பு கொண்ட கட்டிடம், ஷெட்டுகள், கதவுகள் போன்ற பிற, கதவு எண்கள்.7/67A, 7/67A1, 7/67B & 7/67C, சொத்து வரி மதிப்பீட்டு எண்.2033, 7736, 2034 & 2035, அதன் E. B. இணைப்பு எண். 03-213-001-1972, 03-213-001-2100 & 03-213-001-1105 அதனுடன் ஒயரிங்குகள், பைப்புதிங்கள் போன்ற பிற மற்றும் அதனுடன் வழக்கமான நடைவழி மற்றும் எளிய உரிமைகள் போன்ற பிற உட்பட மற்றும் சொத்திற்கு செல்லும் இதர வழக்கமான சாலைகள் மற்றும் வாகனப்பாதைகள் உபயோக உரிமைகள் உட்பட. Latitude:11.0337689, Longitude:77.3279755 (Baanknet Property ID: PUNBDCB28214310)

குறைந்தபட்ச கேட்பு விலை: ரூ. 26,28,05,000/- டெபாசிட் தொகை: ரூ. 2,62,80,500/-

வங்கிக்கு தெரிந்தவரை மேற்குறிப்பிட்ட சொத்துக்களுக்கு வில்லங்கங்கள் ஏதுமில்லை.

13(2) SARFAESI சட்டம் 2002ன் படி கோரிக்கை அறிவிப்பு தேதி: 25-03-2024
13(4) SARFAESI சட்டம் 2002ன் படி சுவாதீன அறிவிப்பு தேதி: 29-06-2024
(திருப்பூர் தலைமை நீதித்துறை நடுவரிடமிருந்து சொத்தை நேரில் கையகப்படுத்துவதற்கான உத்தரவை வங்கி பெற்றுள்ளது)
EMD செலுத்த கடைசி தேதி 05.10.2026 அன்று மாலை 5.00 வரை
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியிடம் முன் அனுமதி பெற்று சொத்துக்களை பார்வையிடுதல் 29-09-2026
மின் ஏல தேதி மற்றும் நேரம் 06.10.2026 நேரம் : காலை 11 முதல் மாலை 4 மணி வரை
ஏல உயர்வு (ஏலத்தை உயர்த்திக் கோருவதற்கான குறைந்தபட்ச தொகை): ரூ.1,00,000/-
தொடர்புக்கு: B.வர பிரசாத், முதன்மை மேலாளர்/அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, மொபைல்: 8884822944, பிரியாக் ராஜ் சாஹு, சட்ட அலுவலர், மொபைல்:7477057944.
வங்கிக்கு செலுத்த வேண்டிய மொத்த நிலுவைத் தொகை 30.06.2026 அன்றுள்ளபடி ரூ.52,63,40,651.32/- (ரூபாய் ஐம்பத்து இரண்டு கோடியே அறுபத்து மூன்று இலட்சத்து நாற்பது ஆயிரத்து அறுநூற்று ஐம்பத்து ஒன்று மற்றும் பைசா முப்பத்து இரண்டு மட்டும்)

விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்: விற்பனையானது கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002ல் பரிந்துரைக்கப்பட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை பொறுத்து மற்றும் பின்வரும் கூடுதல் நிபந்தனைகளுக்கு உட்பட்டது. (1). "எங்கு உள்ளதோ உள்ள நிலையில்" மற்றும் "என்ன உள்ளதோ உள்ள நிலையில்" மற்றும் "என்னவெல்லாம் உள்ளதோ உள்ள நிலையில்" என்ற அடிப்படையில் சொத்துக்கள் விற்பனை செய்யப்படும். (2). அட்டவணையில் மேற்குறிப்பிட்ட பிணைச் சொத்துக்களின் விவரங்கள் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் சிறந்த அறிவுக்குக் கூறப்பட்டுள்ளன, எனினும் இந்த பிரகடனத்தில் ஏதேனும் பிழை, தவறான அறிக்கை அல்லது விடுபடுதல்கள் ஏதேனும் இருப்பின் ஆகியவற்றிற்கு அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி பதிலளிக்கமாட்டார். (3). விற்பனையானது கீழே கையொப்பமிட்டவரால் 06.10.2026 அன்று காலை 11.00 மணி முதல் மாலை 04.00 மணி வரை https://baanknet.com என்ற இணையதளம் மூலமாக நடத்தப்படும். (4). விற்பனையின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு https://baanknet.com & www.pnbindia.in ஆகிய இணையதளங்களில் காணவும்.

SARFAESI சட்டம் 2002 விதி 8 (6) & 9 (1) ன் கீழ் இந்த சட்டரீதியான அறிவிப்பு.

தேதி : 16.09.2026
இடம் : சென்னை
முதன்மை மேலாளர் / அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
பஞ்சாப் நேஷனல் வங்கி, பிணையக் கடன் வழங்கிய வங்கி